DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.24**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | V.K.குருசாமி |
| Father Name | : | கிருஷ்ணதேவர் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 8, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 4, 5, 6 மற்றும் 9 எதிரிகள்ஆஜர் இல்லை. 4, 5, 6 மற்றும் 9 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது பாளையங்கோட்டை மத்திய சிறையில் கைதியாக உள்ளேன். எனக்கு சுரேஷ்பாபு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை இந்த வழக்கு பற்றி எதுவும் விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுாகா, அரியமங்கலம் கிராமம் ஆகும் என்றும், நான் சிறு வயதிலே மதுரைக்கு வந்துவிட்டேன் என்றும், 1978ம் வருடம் முதல் திமுக கட்சியில் இருக்கிறேன் என்றும், 1984ம் ஆண்டு 62வது வட்ட திமுக கழக செயலாளராக இருந்தேன் என்றும், 3 முறை

8ம் பகுதி கழக செயலாளராக இருந்தேன் என்றும், மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும், வீட்டுவசதி வாரிய தலைவராகவும், டவுன் பிளானிங் சேர்மானகவும் இருந்தேன் என்றும் நான் வக்கீல் சாமுவேல் ராஜை அவருடைய அலுவலகத்திற்க என்னுடைய வழக்கு கேஸ் சம்மந்தமாக போய் பார்க்க போகும் போது பொட்டு சுரேஷ் அங்கு வருவார் என்றும், அட்டாக் பாண்டி எனது பகுதிகாரர் என்றும், 1996ல் அட்டாக் பாண்டி என்னிடம் பகுதி இளைஞர் அணி செயலாளர் பதவி கேட்டார் என்றும், நான் பகுதி தொண்டர் அணி செயலாளர் பதவிக்கு பரிந்துரை செய்தேன் என்றும், ஒரு சமயம் திமுக தலைவர்களை பற்றி அவர் பத்திரிக்கையில் பேட்டி கொடுத்துவிட்டார் என்றும் அதன்பிற்கு நான் அவரிடம் எந்த பேச்சு வார்த்தையும் தொடர்பும் வைத்துகொள்ளவில்லை என்றும், 29.01.2013ம் தேதி நான் என்னுடன் உள்ளவர்களையும் என் மகனையும் அழைத்துக்கொண்டு கும்பகோணம் சென்று அங்குள்ள கோவில்களுக்கு சென்று வழிபட்டு அங்கேயே தங்கிவிட்டோம் என்றும், 31.01.2013ம் தேதி அங்குள்ள கோவில்களை பார்த்துவிட்டு மாலை சுமார் 05.00மணிக்கு காரில் புறப்பட்டு மதுரைக்கு வந்து கொண்டிருந்தேன் என்றும், அப்பொது என் போனிற்கு தொடர்பு கொண்டு யாரோ பொட்டு சுரேஷை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், மேலும் பொட்டு சுரேஷ் கொலைக்கு காரணம் எதுவும் தெரியாது என்றும், நான் யாரையும் சந்தேகப்படவில்லை என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீஸார் அவர்களாகவே எழுதிக்கொண்டுள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் Hybrid video conference மூலமாக சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.10 17:57:39 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.